**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.116/2025**

2026 –ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 09.04.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தமிழ்வாணன் (PW–1 ) | வயது | : | 71/2026 |
| க/த பெயர் | : | திரு. ஜெகநாதன் | தொழில் | : | – |
| முகவரி | | துளசேந்திரபுரம் | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனது மனைவி பெயர் என்னவென்றால் ஜானகி. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 குழந்தைகள். எனது மாமியார் பெயர் என்னவென்றால் முல்லையம்மாள், காசியம்மாள் என்றும் அழைப்பார்கள். ஜானகியின் அம்மா பெயர் முல்லையம்மாள் தான் என்றும், வழக்கிற்காக காசியம்மாள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஜானகியின் அம்மா பெயர் காசியம்மாள் என்று ஆவணங்களில் உள்ள விபரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 14.05.2025 அன்று தெரியவந்தது.
2) மாமியார் பெயர் முல்லையம்மாள் என்று மாற்றி தர சம்பந்தப்பட்ட அரசு அலுவலகத்தில் மனு கொடுத்தேனா என்றால் மனு கொடுத்தேன் நீதிமன்ற உத்தரவு பெற்று வந்தால் மாற்றி தருவதாக சொல்லி மறுத்துவிட்டார்கள். நான் உரிய அரசு அலுவலத்தில் மாமியாரின் பெயர் முல்லையம்மாள் என்று இறப்பு சான்று, வாரிசு சான்று ஆகியவற்றில் மாற்றுவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.10 17:14:28 +0530

District Munsif
Mannargudi.